இருந்து குறிப்பிட்ட காலத்தில் வந்து சேரவில்லை. இதுவும் பாட நூல்கள் வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு ஒரு காரணமாகும்.

6. கன்னியாகுமரி மாவட்டத்தில் பாட நூல்கள் மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று திருவாளர்கள் ஜே.ஜேம்ஸ் எம். எல். ஏ., வில்சன் அப்போலஸ், எம். எல். சி., ஆகிய இருவரும் தந்தி மூலமாகவும், கடித மூலமாகவும், அரசுக்குத் தெரிவித்தார்கள். பாட நூல் நிறுவனத்திடம் இது பற்றி அறிக்கை பெறப்பட்டது. இந்த அறிக்கையிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 5–7–1977 வரை ரூ. ஒன்பது லட்சத்து 63 ஆயிரத்து 419·45 மதிப்புள்ள பாட நூல்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிய வருகிறது. சென்ற ஆண்டு முழுவதும் இந்த மாவட்டத்தில் விற்பனையான நூல்களின் மதிப்பு ரூ. 8 லட்சத்து 36 ஆயிரத்து 306.24 தான். மேற்படி உறுப்பினர்களுக்கு இது சம்பந்தமாக விபரமான பதில் 13–7–1977 அன்று அனுப்பப்பட்டு உள்ளது.

3. வினாக்கள்—விடைகள் (தொடர்ச்சி)

பள்ளிப் பாட புத்தகங்கள்

*3 குறுகிய கால வினா:—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பள்ளிக்கூடங்கள் திறந்து வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்கு மேலாகியும் மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம், எனில், காரணம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (அ & இ):—பாட நூல்களைப் பரிசீலித்து நாட்டுப்பற்று, ஒருமைப்பாடு, முதலியவற்றை நூல்களில் சேர்க்கும் பொருட்டு, அரசு நியமித்த குழுக்களின் பரிந்துரைகள் மீது, 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் பிறகு தமிழ் நாட்டு பாட நூல் நிறுவனம் நூல்களை அச்சிடும் பணியை மேற்கொண்டது. மலிவு விலையில் அச்சிடும் தாள் உரிய காலத்தில் காகித ஆலையிலிருந்து வந்து சேரவில்லை. எனவே மொத்த விற்பனையாளர்களாகிய தாலுக்கா கூட்டுறவு பண்டக சாலைகளுக்கு நூல்களை அனுப்புவதில் சிறிது கால தாமதம் ஏற்பட்டது.

1977 ஜூலை 23]

திரு. சோ. அழகர்சாமி :—தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி போட்டு இரண்டு வாரங்களுக்கு மேலாகிறது. ஆகவே, இப்போது புத்தகங்கள் எந்தெந்த பள்ளிக்கூடங்களுக்குப் போய் சேரவில்லை என்று சொல்லப்பட்டதோ அந்தப் பள்ளிகளுக்கு எல்லாம் புத்தகங்கள் போய் சேர்ந்து விட்டதா ?

இன்னொன்று பாட புத்தகங்கள் வாங்குவதில், இதற்கு முன்னால் புத்தகங்களை முன்னாலேயே வாங்கிவிட்டால், உதவித் தொகை கொடுக்கும்போது, இதற்கான பணத்தையும் சேர்த்து கொடுத்துவிடுவதுண்டு. இப்போது, உதவித் தொகைக்கு பதிலாக பாட புத்தகங்களை வாங்கி கொடுத்துவிடுவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில் மாணவர்கள் தாங்களாகவே புத்தகங்களை வாங்கிவிட்டார்கள் என்ற தகவல் அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்படிப் புத்தகம் வாங்கியவர்களுக்கு, மீண்டும் புத்தகங்களை வாங்கிக் கொடுக்காமல், உதவித் தொகையைக் கொடுத்துவிட்டால், நலமாக இருக்கும். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுவரை புத்தகங்கள் சேராத இடங்களுக்கு எல்லாம் உடனடியாக சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. புத்தகங்களை வாங்கி விட்ட மாணவர்களுக்கு உதவித் தொகையை கொடுத்துவிடலாம் என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்த இந்தப் பதிலில் அரசாங்கத்திற்குள்ள சிக்கல்களை ஒத்துக்கொண்டார்கள். அதே நேரத்தில் பள்ளிகளில் மாணவர்கள் புத்தகங்கள் வாங்கவில்லை என்ற காரணத்திற்காக மாணவர்களை பள்ளிகளிலிருந்து வெளியேற்றி விடுகிறார்கள். இது அரசாங்கத்திற்கும் தெரிந்து இருக்கும் என்று நினைக்கிறேன். இந்த நிலைமை இருப்பதின் காரணமாக பல சிக்கல்களும் சங்கடங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பல இடங்களில் தாய்மார்கள் மிகவும் கஷ்டப்பட்டு காலையிலேயே காட்டுக்குச் சென்றி மூன்று அல்லது மூன்றரை ரூபாய்க்கு காட்டுக் கருவல்விறகு சேகரித்து விற்று மாணவர்களுக்கு புத்தகங்களை வாங்கிக் கொடுக்கிறார்கள். இப்படியிருந்தும் சில மாணவர்கள் புத்தகங்கள் வாங்கவில்லை என்ற காரணத்திற்காக மாணவர்களை வெளியே வீட்டுக்குஅனுப்பிவிடுகிறார்கள். ஆகவே................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கேள்வியைச் சுருக்கமாக் கேளுங்கள்.

திரு. செ. சிவசாமி: இந்த நிலைமை பரமக்குடி பகுதியில் இருந்து வருவதால், மாணவர்களைப் பள்ளிகளில் இருந்து வெளியே அனுப்பக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவிடுமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20.)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பள்ளியில் இந்த மாதிரி செய்தார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் தெரிவித்தால், அதுபற்றி தேவையான நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய பதிலிலே இருந்து, 11—4—1977-ல் பாட நூல் சம்பந்தமாக அரசாங்கத்தின் இறுதி ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது என்றிருந்தாலும்கூட, இப்போது ஜூலை மாதம் இறுதி யாகி விட்டபோதிலும்கூட, இதுவரை மாணவர்களுக்குப் போது மான புத்தகங்கள் இன்னும் கிடைக்கக்கூடிய வகையில் வழி செய்யப்படவில்லை. சாதாரணமாக ஜூன் மாதம் முதலில் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படும். இப்படிப் பள்ளிக்கூடங்கள் திறந்து 2 மாதங்கள் ஆகியும், போதுமான பாடநூல் பிள்ளை களுக்கு இன்னும் கிடைக்க ஏற்பாடு செய்யவில்லை. கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்லக்கூடிய இந்த நேரத் தில் இம்மாதிரியான நடவடிக்கைகள் அதற்கு இடையூறாக உள்ளன என்பதை இந்த அரசாங்கம் உணருமா? அதோடு, இந்தப் பாட நூல்களை விநியோகிப்பதிலே இப்போது நாம் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக விநியோகிக்கும் முறையைக் கையாண்டு வருகிறோம். இவைகளின் மூலம் விநியோகிப்பதால், காலதாமத மும், பல கஷ்டங்களும் ஏற்படுகின்றன. ஆகவே தனியார் மூல மாகவும் விநியோகித்தால் இந்தக் கஷ்டம் ஓரளவு குறைய முடியும். இதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கின்ற நிலைமை அடுத்து வருகின்ற ஆண்டில் ஏற்படாது. பாடநூல்களில் நீக்கம், சேர்த் தல் பற்றிய இறுதி ஆணை 11—4—1977-ல் போடப்பட்டது. அதற்குப் பிறகுதான் புத்தகங்கள் அச்சிட திருத்திய படிகள் அச்ச கங்களுக்கு அனுப்பப்பட்டன. ஆகவேதான் இதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. நாங்கள் எல்லாம் பொறுப்பேற்றுக்கொண்டது ஜூன் 30 ஆம் தேதி தான் என்பதை யும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணருவார்கள்.

1977 ஜூலை 23]

திரு. பி. கே. மூக்கையா தேவர் : பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்குப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்பது ஒரு புறம் இருக்க, அப்படி அச்சடிக்கப்பட்டு கொடுக்கப்பட்ட புத்தகங்களில் பிழைகளும், தவறுகளும் நிறைய இருக்கின்றன. உதாரணமாக, ஒன்பதாம் வகுப்புத் தமிழ்ப் பாட புத்தகத்தில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களுடைய பிறந்த நாள் பிப்ரவரி 23 ஆம் தேதி என்று போடப்பட்டிருக்கிறது. அவருடைய பிறந்த தேதி, 1897 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ம் தேதி. அதேபோல் அவர் வெளிநாட்டில் தனியாக தற்காலிக அரசாங்கம் அமைத்தது 1943 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் தேதி. அதையும் மாற்றி அச்சடித்திருக்கிறார்கள். இப்படி பல பிழைகள் இருக்கின்றன. இவைகளைத் திருத்துவதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவைகளைத் திருத்துவதற்கான தக்க நடவடிக்கைகளை எடுக்கிறோம்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாட நூல்கள் தஞ்சை மாவட்டத்திலே, மன்னார்குடி பகுதியில் போதுமான அளவு கிடைப்பதில்லை. பாட நூல்களை கூட்டுறவுத் துறைகள் மூலம் துரிதமாக விநியோகிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? இந்த ஆண்டு இருப்பதைப் போலவே, கூட்டுறவுத்துறைகள் மூலம் விநியோகிக்கப்பட்டுத் தனியார் துறை தவிர்க்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

தவிர, மத்திய அரசாங்கம் பத்திரிகைக் காகிதம் அனுப்புவதற்கு காலதாமதம் ஆனதற்கான காரணம் என்ன? இனி வரும் ஆண்டுகளிலாவது பொறுப்போடு, பிள்ளைகள் படிப்பதற்கு காலதாமதம் ஆகாமல், உரிய காலத்தில் காகிதம் அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, புத்தகங்களை விநியோகம் செய்கின்ற ஒரு பொறுப்பை இப்போது கூட்டுறவுத் துறையினர் மூலமாகத்தான் இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. தனியார் துறையினரிடம் தந்ததில், ஊழல்கள் நடந்திருப்பதாக புகார்கள் வந்திருக்கின்றன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களோ, தனியார் துறைக்குத் தரலாம் என்று யோசனை சொல்கிறார்கள்.

திரு. மு. அம்பிகாபதி : தனியார் துறைக்கு விற்பனை உரிமை கொடுக்கக்கூடாது என்று தான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நன்றி. கூட்டுறவுத் துறை மூலம் விநியோகம் செய்வதை நல்ல முறையிலே விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே, பள்ளிகளிலே மாணவர்களுக்குக் கொடுத்த புத்தகங்களைத் திருப்பிப் பெறுகின்றார்கள். அப்படித் திருப்பிப் பெற்றுவிட்டு, மாணவர்களைப் புத்தகங்கள் வாங்காவிட்டால், பள்ளிக்கு வரவேண்டாம் என்று சொல்கிறார்கள். இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, குறிப்பிட்ட வருமான வரம்புக்கு உட்பட்டவர்களுக்குத்தான் இந்த உதவி அளிக்கப்பட வேண்டுமென்ற அரசு ஆணைக்கு மாறாக பல பேருக்குப் புத்தகங்களைத் தந்து விட்டதாகத் தெரிந்ததன் பேரில் அப்படிக் கொடுத்த புத்தகங்களைத் திரும்பப் பெறும் முயற்சியில் தலைமையாசிரியர் ஈடுபட்டார். அப்படிக் கொடுத்த புத்தகங்களைத் திரும்பப் பெற வேண்டாமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : கூட்டுறவு விற்பனை அங்காடிகளில் இந்தப் புத்தகங்கள் விற்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். அதைப் பெறுவதில் எல்லா மாணவர்களுக்கும் இடர்ப்பாடு இருக்கிறது என்றாலும், அரசு உதவி பெறுகிறவர்கட்கென சமூகநலத் துறையிலிருந்து உரிய தொகை கூட்டுறவு அங்காடிகளுக்கு அனுப்பாததால் இந்த இடர்ப்பாடு ஏற்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தப் புகார் பொதுவாகவே இருக்கிறது.

திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மூக்கையாத் தேவர் குறிப்பிட்டது போல் இன்னொரு வகுப்பு சரித்திரப் புத்தகத்தில் தந்தை பெரியார் அவர்களைப் பற்றிய பாடத்தில் பெரியார் வைக்கத்தில் ஆலயப் பிரவேசத்திற்காகப் போராட்டம் நடத்தினார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வைக்கத்தில் நடத்திய போராட்டம், ஒரு குறிப்பிட்ட தெருவில் அரிசன மக்கள் செல்லுவதைத் தடுத்ததை எதிர்த்து நடத்திய போராட்டமாகும். இது திருத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்தத் தவறைப் பார்த்துத் திருத்துகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒ. சொ. வேலுச்சாமி : இலவசமாகப் புத்தகங்கள் கொடுக்கக்கூடிய தொகையைவிட, அந்த மாணவர்களுடைய பெற்றோர்கள் வருமான வரம்பு பற்றிய சான்றிதழ்களைப் பெறுவதற்கும், பிற்பட்டவர்கள் போன்ற சான்றிதழ்களைப் பெறுவதற்கும் செலவழிக்கக்கூடிய தொகை சில நேரங்களில் அதிகமாகி

1977 ஜூலை 23]

விடுகிறது. இவ்வாறு அவர்கள் சார்ந்துள்ள சமூகம், வருமானம் ஆகியவற்றுக்காக பெற்றோர்களைச் சான்றிதழ்கள் பெற்றுத் தரும் படி சொல்வதற்குப் பதிலாக தலைமையாசிரியர்கள் அவர்களே தாசில்தாரிடத்தில் தொடர்பு கொண்டு அந்தந்த மாணவர்களுக்கு நேரடியாகச் சான்றிதழ் பெற்றுத் தர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாணவர்கள் வருமானம் சாதி சம்பந்தமான சான்றிதழ் பெறுவதில் இருக்கக்கூடிய சங்கடங்கள் இந்த அரசு உணருகிறது. அதுபற்றிய நிலைமைகளைப் பரிசீலித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாடப் புத்தகங்கள் அரிசன மாணவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்ற திட்டம் வைக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூட ரெக்கார்டுகளிலேயே அவர்கள் அரிசனங்கள் என்பதற்கான அத்தாட்சி இருந்தும் கூட, அவர்களை அரசு அதிகாரிகள் எம்.எல்.ஏக்களிடம் அத்தாட்சி வாங்கிக் கொண்டு வரவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அது தேவையில்லை என்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது இருந்து வருகிற நடைமுறை இது. ஏற்கனவே இருந்த அரசால் நடத்தப் பட்டு வந்த நடைமுறையில் வேண்டிய மாற்றங்களை நாங்கள் செய்ய இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்.)

திரு. எம். ஏ. லத்தீப் : அமைச்சர்கள் பொறுப்பை 30 ஆம் தேதியன்று ஏற்றுக் கொண்டிருந்தாலும் இந்தத் துறை தொடர்ந்து நடை பெற்று வருகிற துறை. கல்வியாண்டு தொடங்குகிற ஒவ்வொரு ஆண்டும் இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று தெரிந்து வைத்திருக்கிற துறை. அதிலே தாமதத்திற்கும் அமைச்சரவை பொறுப்பேற்றுக் கொள்வதற்கும் தொடர்பு இல்லை. இந்தக் குறைகளை நீக்கும் வகையில் இந்தத் துறையில் பாடப் புத்தகங்களுக்கான பாடத் திட்டங்களை வகுக்கின்ற கட்டத்தில் தாமதம் ஏற்பட்டிருக்கிறதா அல்லது அச்சகத்தில் தாமதம் ஏற்பட்டிருக்கிறதா, அச்சு முடிந்த பிறகு விநியோகத்துறையில் தாமதம் ஏற்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கி அப்படி ஏற்படுகிற தாமதத்திற்குக் காரணங்கள் யாவை, யார் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் ? எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தாமதத்திற்கு மிக முக்கியமான காரணம்—தேச பக்தியைக் கடைப்பிடிக்கிறோம் என்ற அடிப்படையில் இதற்கு முன்னால் இருந்த பாடப் புத்தகங்

களில் மாறுதல் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டு சில பரிசீலனைகள் செய்து சேர்க்க வேண்டியவற்றைச் சேர்க்கவும், நீக்க வேண்டியவற்றை நீக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இப்போது புதிதாக நாங்கள் பொறுப்பேற்று தாமதத்தைத் தவிர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற நிலைமை நிச்சயமாக எதிர் காலத்தில் இருக்காது.

திரு. செ. சிவசாமி: பாடப் புத்தகங்களை வாங்கக்கூடிய சிக்கல்கள் இருப்பதோடு, பாடப் புத்தகங்களுக்கான நோட்ஸ், மற்றும் நோட்டுப் புத்தகங்களின் விலைகள் கடந்த இரு வாரங்களாக 10-ல் இருந்து 20 சதவிகிதம் வரை உயர்ந்திருக்கிறது; அதோடு மாணவர்கள் உபயோகப்படுத்தக்கூடிய எல்லாவிதமான பொருள்களும் சன்னஞ்சன்னமாக விலையேறிக் கொண்டிருக்கிறது. இந்த விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளித்த நேரத்திலே குடியரசுத் தலைவர் ஆட்சியில் பாடப் புத்தகங்களில் நீக்கப்படவேண்டியவைகள் நீக்கப்பட்டுள்ளன என்ற கருத்துப்படப் பதிலளித்தார்கள். அப்படியானால் தந்தை பெரியார் பற்றிய கருத்துக்கள் நீக்கப்பட்டிருக்கின்றன, அவைகளும் நீக்கப்பட வேண்டியவை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நான் சொன்னது குடியரசுத் தலைவர் ஆட்சியில் அவர்கள் செய்த ஒன்றைத்தான். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள், நானும் சொல்லியிருக்கிறேன், தந்தை பெரியார் அவர்கள் பற்றிய கருத்துக்களைப் பாடப் புத்தகங்களில் இப்போது அனுபந்தமாகச் சேர்க்க உத்திரவிடப்பட்டிருக்கிறது என்று. இதற்கு மேலும் நான் ஒன்றை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தந்தை பெரியார் அவர்களுடைய வரலாற்றுக் கருத்துக்கள், தி.மு.க. ஆட்சியில் 8-ஆம் வகுப்பு வரலாற்றுப் புத்தகத்தில் இடம்பெறாத தந்தை பெரியார் அவர்களின் வரலாற்றுப் பகுதியும் இப்போது இடம்பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (ஆரவாரம்).

1977 ஜூலை 23]

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அரிசன மாணவர்கள் இலவசமாகப் பாடப்புத்தகங்கள் பெறுவதற்கு சான்றிதழ்கள் பெறவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால் இலங்கையிலிருந்து வந்த அகதிகள், பர்மாவிலிருந்து வந்த அகதிகள் இவர்கள் எல்லாம் தங்களுடைய பேமிலி கார்டு, பாஸ் போர்ட் இவைகள் வைத்திருந்தாலும் அதிலே அவர்கள் எந்த சமூதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடப்படாமல் இருக்கிற காரணத்தால் தாசில்தார்கள் சான்றிதழ்கள் வழங்க மறுக்கிறார்கள். ஆகவே, பர்மா அகதிகள், இலங்கை அகதிகள் இவர்கள் எல்லாம் அங்கிருந்து இங்கே வந்திருக்கின்ற காரணத்தால் சான்றிதழ் பெறுமலேயே பாஸ் போர்ட்டை வைத்தே அவர்களுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்கள் பெறக்கூடிய வழியைச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

5. அவையுரிமைப் பிரச்சினைகள் :

(அ) "மெயில்" நாளேடு குறித்து எழுப்பப்பட்ட பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 13—7—1977 அன்று இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் '' மெயில் '' ஆங்கில நாளேட்டின் மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்பினார். 7—7—1977 அன்று '' மெயில் '' பத்திரிகையின் தலையங்கத்தில் மாண்புமிகு உறுப்பினர் இப்பேரவையில் 4—7—1977 அன்று நிகழ்த்திய உரையின் மீது கருத்துத் தெரிவித்து எழுதி உள்ளது என்றும், ஆனால் அதில் அவரது உரையைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அத் தலையங்கம் அமைந்திருக்கிறது என்றும் இது அவை உரிமை மீறிய செயலாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து மெயில் பத்திரிகை ஆசிரியரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அவர் எழுதியுள்ள பதிலில் கூறியிருப்பதாவது :—

". . . The matter in question does not refer to a news item but an editorial comment, based on the reported speech of the Chief Minister which gave me the impression that Mr. Latheef claimed